*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC.161/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW-7 (LW-8)***

*Name / Father's Name: **திரு.உதயகுமார் த/பெ. சங்கரைய்யா***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17.02.2026.**

துவக்க நேரம் 01.42 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது சேலம் மாவட்டம், கணினிவழி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.04.2023ம் தேதி மதியம் 01.30 மணியளவில் நான், தம்மம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபொழுது, ஆத்துார் அரசு மருத்துவமனையிலிருந்து முன்னதாக கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று நான் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சந்தியா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து, அதன் அடிப்படையில் தம்மம்பட்டி கவால் நிலைய குற்ற எண்.84/2023 சட்ட பிரிவுகள் 341, 294(b), 323, 506(1) இ.த.ச-யுடன் இணைந்த Sec 4 of TNPHW Act ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, வழக்காவணங்களை விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே மதியம் 02.30 மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் லூர்துமேரி மற்றும் நவீன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சாட்சிகள் 1 முதல் 7 வரையில் உள்ளவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை எனத் தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு வழக்கின் விசாரணையை முடித்து, சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் வழக்கு பதிவு செய்த பிரிவுகளின் கீழ் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்கு சம்பவம் நடைபெற்று மூன்று நாட்கள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கை இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி காலதாமதத்திற்குண்டான காரணத்தினை நான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) புகார்தாரருக்கு சாதாரண காயம் கூட ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்குரிய காயச்சான்றிதழை பெற்று, இவ்வழக்கில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும், புகார்தாரருக்கும் இடையே முன்விரோதம் இருந்தது பற்றி நான் விசாரித்தேனா என்றால் இல்லை.

3) இவ்வழக்கு சம்மந்தமாக நான் நேரடியாக சம்பவயிடத்திற்கு சென்று விசாரிக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயாரித்த ஆவணங்களின் அடிப்படையில் எதிரிக்கெதிரான குற்ற அறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கெதிராக இந்த வழக்கில் குற்ற பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.59 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.17 16:20:34 +0530

Judicial Magistrate No.2, Attur.